


# நிலவிலே பேசுவோம்!



மாலையிலே மது ஒழிப்புக் கூட்டம் நடைபெற்றது! ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெருங் கூட்டத்திலே ஆண் சிங்கம்போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளையும், அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழி வகைகளையும் அள்ளி விளாசி, இடையிடையே காந்தியத்தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்புதான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்போது மணி எட்டு இருக்கும். அவருக்குப் பசி; அத்துடன் கூட்டத்திற் பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடிந்ததும், அறுசுவையுண்டியின் ருசியில் நாவைத் திளைக்கவிட்டபடியே, உள்ளே இருந்த 'ஓர்குலம்' பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஜக ஜோதியாகப் பிரகாசித்துக்கொண்டிருந்த மின்விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு பந்திகூட வாசித்திருக்கமாட்டார். வெளியே, வாசற்பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படிந்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் - நசிந்து போன கூட்டம் - அதாவது 'உழைத்தாற்றான் உணவு' என்ற நிலையிலிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன், தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்றுவிட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

''அடடே! நீயா கந்தா! என்ன சேதி?'' என்றார்.

''உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக......'' என்று தயக்கத்துடன் சொன்னான்.

''ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே!'' என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

''இன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்களையும் கூப்பிட்டு.....'' வார்த்தையை முடிக்காமல் வாசற் பக்கம் திரும்பி, அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒரு கணம் திக்குமுக்காடினார். மனதிலே ஒரு பரபரப்பு - தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப்புருவங்களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

''வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக்கூடாத விஷயங்கள். மனைவி மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அதோ பார்! வெளியே நல்ல நிலவு! அத்துடன் பால்போன்ற மணல், அங்கே போய்ப் பேசிக்கொள்ளலாம்; வா!'' என்று அவன் பதிலை எதிர்பாராமலே, கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக



பின், வாசலில் நின்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சற்றுத் தூரம் போய் ஒரு நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

வந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில். ஊர் முழுவதும் ''மது ஒழிக!'' என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி.............?

மது ஒழிப்புக் கூட்டத்திலே, சிவப்பிரகாசம் காரசாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே, அவரிடமே வந்து சேர்ந்தார்கள். தமது ஜீவனப் பிரச்சினைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

''........... நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மதுவினால் உலகத்துக்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக்கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல; ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம்; 'எக்ஸைஸ்' உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்துக்கு மேலே 'கிம்பளம்' கொடுத்தும் ஒளித்தோடுகிறோம்..... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத் தான் நாம் வாழவேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும்போது, நமது நிலைமையை எண்ணிப் பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில்தான்! என்றாலும்........'' என்று இழுத்தான். அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

'' ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி!'' என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

''நமக்கு வேறு தொழில் வேண்டுமே!''

சிவப்பிரகாசம் சிரித்தார். ''இதென்ன பிரமாதம்? இந்தப் பரந்த உலகத்தில் தொழிலுக்கா பஞ்சம்?'' என்றார்.

''எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனதான்''

''ஏன்?''

ஒரு தேநீர்க்கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேநீர் குடிப்பார்களா? அல்லது ஒரு பலசரக்குக்கடை வைத்தாற்கூட நம்மிடம் வந்து சாமான் வாங்குவார்களென்பது என்ன நிச்சயம்? ஏன் ஒரு இரும்புக் கடையில்கூட நம்மவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்களே; இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம் வேண்டாம்; என்னை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு கூலியாக வைத்துக்கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலைமையில்...............'' என்று அந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அப்போதும் அவர் சிரித்தார்.

''அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விஷயம். இவைதான் தொழில்களா? வேறு கைத்தொழில் செய்கிறது!''

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்துவிட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்;



‘‘ஆமாம்! அதெல்லாம் வேறு விஷயங்கள். உங்களுக்கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்த வயதில் நான் வேறு புதுத் தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலன் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாயிருக்கும். தொழில் பழகுகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நானும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்க வேண்டியதுதான்! அப்படித்தானே உங்கள் திட்டம்?’’

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். எனினும் சமாளித்துக்கொண்டு, ‘‘ஆத்திரப்படாதீர்கள்! நீங்கள் ஒருங்கே திரண்டு உங்க தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுச் சேர்க்க வேண்டாம். கருப்ப நீர் இறக்குங்கள். ஒரு சீனித் தொழிற்சாலை நிறுவித் தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டுவிடப் போகிறார்களா?’’ என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக் குரல் கேட்டது.

‘‘அதொன்றும் வேண்டாம். மதுவினால் நன்மையோ தீமையோ! நமது சமூகம் கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனபடியால்தான் மதுவிலக்கு வேண்டுமென்கிறீர்கள். நீங்கள் மதுவை ஒழியுங்கள். காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசி கிடந்து சாகிறோம். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்துவிட்டால் தீண்டாமையும் கொஞ்சம் ஒழிந்துவிடும். உங்களுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய். அதே நேரத்தில் ‘ஜின்’னும், ‘பிரண்டி’யும் மருந்துக் கடைகளில் விலைப் படட்டும், மருந்து என்ற பெயரில்!’’

‘‘சைச்சை! இது தவறான வாதம்! அப்படி எண்ணவே கூடாது!’’

‘‘பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மது ஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே, முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?’’ என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாய் விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

‘‘நாங்கள் போய் வருகிறோம். சிந்தித்து நல்லதைச் செய்யுங்கள். ‘மதுவிலக்கு அவசியம் வேண்டும்!’ அதே நேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழவேண்டும். இந்த அடிப்படையிலே தொண்டாற்றுங்கள். உங்களுடன் நாமும் சேர்ந்துகொள்கிறோம்’’ என்று சொல்லிவிட்டு நடந்தார்கள்.

‘‘வெளியே நல்ல நிலவு - அங்கே போய்ப் பேசிக்கொள்ளலாம்!’’ என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை.

என்.கே. ரகுநாதன்

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| எக்ஸைஸ் உத்தியோகத்தர் | - | மதுவிலக்கு அதிகாரி |
| திக்குமுக்காடினர் | - | தடுமாறினர் |

## பயிற்சி

1. 'நிலவிலே பேசுவோம்' என்ற கதைத்தலைப்பின் அர்த்தத்தை எடுத்துக்காட்டுங்கள்.
2. சிவப்பிரகாசம் என்ற பாத்திரத்தின் பண்புகளை எழுதுங்கள்.
3. தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளை இக்கதை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறது?
4. கீழ்வரும் சந்தர்ப்பங்களை விபரிக்குக.

   1. 'ஆகா அதற்கென்ன நல்லாய்ப் பேசலாமே'
   2. ''நமது நிலையை எண்ணிப் பாருங்கள் மிகப்பயங்கரமான தொழில்தான்'.
   3. ''ஆமாம் அதெல்லாம் வேறு விஷயங்கள், உங்களுக்கென்ன எத்தனையோ சொல்வீர்கள்?''
   4. ''முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?''

## செயற்பாடு

1. 'சாதிபேதம்' வேண்டாம் என்ற பொருள் தொடர்பான ஆக்கங்களைச் சேகரியுங்கள்.
2. தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களின் வரலாறு குறித்த தகவல்களைத் திரட்டுங்கள்.

## சிறுகதை எழுதுவது எப்படி?

அன்பு மாணாக்கர்களே! இதுவரை பல கதைகளைப் படித்திருப்பீர்கள். கதை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெற்றிருப்பீர்கள். அதற்கான வழிகள் பற்றி வல்லுநர்கள் கூறுவதைப் படித்துப் பாருங்கள்.

சிறுகதைகள் குறுகிய காலத்தில் படித்து முடிப்பதற்காகவே தோன்றின; எனினும், அது ஒன்று மட்டுமே அதன் இலக்கணமாகி விடவில்லை. இலக்கியம் பல பிரிவுகளை உடையது; ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வடிவம் உண்டு; தனித்தனியே சில இலக்கணங்கள் உள்ளன. எனவே, குறுகிய காலத்தில் படித்து முடிக்கக் கூடியது என்பது சிறுகதைகளின் வெளி வடிவமைப்புக்குரிய இலக்கணமேயன்றி, அதன் உள்ளமைப்புக்குரிய இலக்கணங்கள் வேறு. இந்த இருவகை அமைப்புகளுக்கும் உரிய இலக்கணங்களை ஒன்று சேர்த்து,

''ஸாமர்ஸெட் மாம்'' என்ற மேலைநாட்டுச் சிறுகதை ஆசிரியர் கூறுகிறார்;

''சிறந்த சிறுகதையில் நல்ல கதையம்சம் இருக்க வேண்டும். அது ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மட்டுமே விவரிப்பதாக இருக்க வேண்டும். ஒரு மூச்சில் படித்து முடிக்கக்கூடியதாக அதை அமைக்க வேண்டும். அது தனக்கென ஒரு தனிப்பண்பைக் கொண்டிருக்க வேண்டும். படிப்போர் மனத்தில் ஆழப் பதிந்து கிளுகிளுப்பை ஏற்படுத்த வேண்டும். ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் தொய்வின்றி ஓரே சீராகச் செல்ல வேண்டும்.''

''சிறுகதை என்பது இலக்கியத்தில் ஒரு பகுதி; இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியாது; ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக்கொள்ளவும் முடியாது. அப்படிக் கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.''

படைப்புத்திறனைக் கற்பிக்க முடியாதா? இது என்ன புதிர்? என்று சிலர் ஆச்சரியப்படலாம். ஆம்! அதைக் கற்பிக்க முடியாதுதான். விருத்தப்பாவை இயற்றுவது எப்படி என்று ஒருவன் மற்றொருவனுக்குக் கற்பிக்கலாம். கற்றுக் கொண்டவன் விருத்தப்பாவை இயற்றிவிடலாம். ஆனால் அந்த விருத்தப்பா ஒரு கலைப்படைப்பாக, ஒரு சிறந்த கவிதையாக அமைவது, இயற்றியவரின் திறமையைப் பொறுத்த விஷயம். உலகில் எல்லா நாடுகளிலும் கோடிக் கணக்கானவர்கள் இலக்கிய இலக்கணங்களைக் கற்றிருக்கிறார்கள். ஷேக்ஸ்பியர், காளிதாசர், தாந்தே என்று ஒரு சிலரைத் தான் மகாகவிகள் என்று சொல்கிறோம். அந்த மகாகவிகள் மற்றவர்களிடம் இலக்கணத்தையும், இலக்கியத்தையும், அதன் நயங்களையுந்தான் கற்றுக்கொண்டார்களே ஒழிய, படைப்புத் திறனைக் கற்கவில்லை.

கதையின் மையமான அம்சம், அதன் கருவே, கதையின் உருவத்தையும், நடையையும் நிர்ணயிக்கக்கூடியதாகும். எனவே, கதையின் சிறப்புக்கு மூலகாரணமாக இருப்பது அதன் கருதான். கருவில் திரு இல்லையென்றால், கதையிலும் வளம் இராது. எனவே கரு பலமானதாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அடுத்தபடி அந்தக் கருவுக்கு கொடுக்கப்பட்ட கதை - உருவம் - சரிதானா என்று பார்க்கவேண்டியது அவசியம். அந்த உருவத்தில் கதையின் கரு சிறப்பாக முழு வளர்ச்சி பெற்று, கதைக்குச் சிறப்பைக் கொடுக்கிறதா, அல்லது வேறொரு உருவில் கதையை எழுதியிருந்தால் இன்னும் நன்றாக இருக்குமா என்று கவனிக்கவேண்டும். எழுதப்பட்ட கதைக்குக் கொடுக்கப்பட்ட உருவத்தைவிட,

வேறோர் உருவம் நன்றாக இருக்குமென்று தோன்றினால் அந்த உருவத்தில் எழுதவேண்டும். இதற்கு, உருவத்தைப் பற்றிய உணர்வு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டியது அவசியம். உருவம் என்றால் என்ன? மையக் கருத்தைக் கச்சிதமாகவும், குன்றாமலும், குறையாமலும் சரியான இடத்தில் தொடங்கிச் சரியான இடத்தில் முடிப்பது உருவத்திற்கு மேற்போக்கான ஒரு விளக்கமாகும்.

வேண்டாத விளக்கங்களோ, வருணனைகளோ இருக்கக்கூடாது. வேண்டிய விளக்கங்களும், வருணனைகளும் இல்லாமல் போய்விடவும் கூடாது. உருவம் அமைவதற்கு இன்றியமையாத விஷயங்கள் இவை. கதையில் சில பகுதிகளைக் குறைத்து விட்டால் உருவம் கெடாது, அல்லது உருவம் அமையும், அல்லது உருவம் இன்னும் கச்சிதமாக அமையும் என்று தோன்றினால் அந்தப் பகுதிகளைக் குறைத்துவிட வேண்டும். சொல்லப்போனால், ஒரு சிறுகதையில் தேவையில்லாமல் ஒரு பகுதி மட்டுமல்ல, ஒரு வார்த்தையோ, ஒரு காற்புள்ளியோ கூட இருக்கக்கூடாது. இருந்தால் அந்த அளவுக்கு அது கதைக்குக் கேடு செய்யும்.

கதையின் கருத்தும், உருவமும், நடையும் சிறப்பாக இருப்பதுடன், தங்குதடையற்ற ஓட்டமும் இருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். கதையை அந்தரத்தில் நிறுத்தி வைக்கும் எந்த அற்புத வியாக்கியானமும் சரி, வருணனையும் சரி கதைக்கு அறவே ஆகாத விஷயம் என்று கொள்ளவேண்டும்.

சில முக்கிய கருத்துகள் :

1. சிறு கதை எழுதுகிறவர் வாழ் நாளெல்லாம் மற்றவர்களுடைய சிறுகதைகளைப் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

2. சிறுகதைகளோடு, காவியம், நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களையும், உலக அனுபவங்களையும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும்.

3. தான் காண்கிற, கேட்கிற, படிக்கிற, அனுபவிக்கிற ஒவ்வொன்றினுடைய உண்மையையும் சாரத்தையும் கண்டறிவதற்கு முயலவேண்டும்.

4. இலக்கியங்களைப் படிப்பதோடு, இலக்கிய விமர்சனங்களையும் படிக்க வேண்டும்.

5. சொந்தப் புத்தியை உபயோகிக்காமல் பிறர் கருத்தை அப்படியே ஏற்கும் கண்மூடித்தனமோ அல்லது அலட்சியமாக உதாசீனம் செய்யும் அகம்பாவமோ கூடவே கூடாது.

6. எழுதும் பயிற்சியை நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட காலம் எழுதாமல் நிறுத்திவைப்பது தவறு. எழுத எழுதத்தான் எழுத்துச் சிறக்கும். ‘சித்திரமும் கைப்பழக்கம்’ என்பது போல், எழுத்துச் சித்திரமும் கைப்பழக்கத்தால் தான் சிறக்கும்.

7. நடைமுறை வாழ்க்கையை ஆதாரமாக வைத்து எழுதும் கதைகளில் நடக்க முடியாத சம்பவங்களையும், காண முடியாத பாத்திரங்களையும், கேள்விப்படாத பெயர்களையும் புகுத்தவே கூடாது.

- கு. அழகிரிசாமி -

### பயிற்சி

பின்வரும் கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகதை அவற்றிற்குப் பொருத்தமான தலைப்பிடுங்கள்.

1. ‘முயற்சி திருவினையாக்கும்’ என்ற தலைப்பில் கதை ஒன்று எழுதுங்கள்.
2. உங்கள் மனதில் ஆழமாய் பதிந்திருக்கும் ஒரு அனுபவம், ஒரு துன்பம், ஒரு மகிழ்ச்சியை கதையாக்குங்கள்.

### செயற்பாடு

உமது பாடசாலையில் நடைபெற்ற சுவாரசியமான, அதிசயமான, சோகமான ஒரு சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு அதனைக் குழுக்களாக இணைந்து கதையாக்குங்கள்.

## மொழிவளம்

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

நீண்ட பல தொடரால் உணர்த்தும் பொருளை ஒருசொற் பிரயோகித்து உணர்த்துவது மொழி நடைக்கு ஆற்றலும் வனப்பும் அளிக்கும். அன்றியும், அத்தகைய சொற்களின் அறிவு பொருட்சுருக்கம் எழுதும்போது மிகுந்த பயனளிக்கும்.

அங்கதம் - வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல்

அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.

அசகாயசூரன் - யார் துணையுமின்றித் தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தோன்.

அவிசு - உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சாதம். வேள்வியில் தேவர்க்குச் சமர்ப்பிக்கும் உணவு.

அறம்பாடுதல் - பிறருக்குத் தீங்கு விளைக்கக் கூடியவான சொற்களையும் சொற்தொடர்களையும் சேர்த்துக் கவிபாடுதல்.

ஆவணம் - எழுத்துருவில் அமைந்த சான்றுப் பத்திரம்

உலோகாயதன் - உலகமும் உலகவின்பங்களும் மாத்திரமே மெய்யென்றும் கடவுளோ, மறுமையோ இல்லையென்றும் வாதிப்பவன்.

| | | |
|---|---|---|
| எதுகை | - | அடிதோறும் செய்யுட் சீர்களின் அல்லது வாக்கியத்தில் சொற்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொகுப்பது. |
| எய்ப்பில்வைப்பு | - | முதுமைக்காலத்தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள் |
| ஓம்படை | - | பேணிப்பாதுகாத்துத்தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல். |
| காவற்காடு | - | கோட்டையோடு சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்த காடு |
| குரவர் | - | அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர். |
| சால்பு | - | அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்களைச் சேர்ந்த பண்பு |

### பயிற்சி

பின்வருவனவற்றுக்குரிய தொடர்மொழிகளை எழுதுங்கள்.

அட்டாவதானி, கையுறை, அரங்கேற்றம், ஒப்புரவு, ஓத்திகை, கன்னிக்கவிதை

### செயற்பாடு

தொடர்மொழியால் குறிப்பிடப்படும் ஒரு மொழியை உடையதான அட்டவணை ஒன்றினை ஏனைய வகுப்புகளுக்குரிய பாடநூல்களை உசாத்துணையாகக் கொண்டு தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள். இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.

## இலக்கணம்

### **கூட்டுப்பெயர்**

கூட்டுப்பெயர் எவ்வாறு உருவாகின்றது என்பதனை அவதானிப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நீரேரி | - | நீர் | + | ஏரி |
| வானொலி | - | வான் | + | ஒலி |
| தொலைக்காட்சி | - | தொலை | + | காட்சி |
| கட்டுரை | - | கட்டு | + | உரை |

இரு சொற்கள் இணைந்த தனிச்சொற்கள் இவையாகும்.

இங்கு இரு பெயர்ச்சொற்கள் இணைந்தும், வினைச் சொல்லும், பெயர்ச் சொல்லும் இணைந்தும் கூட்டுப்பெயர் அமைந்துள்ளது.

ஒரு பெயர்ச்சொல்லுடன் மற்றொரு பெயர்ச்சொல் சேர்ந்து கூட்டுப்பெயர் அமையும்

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | + | பெயர் | = | கூட்டுப்பெயர் |
| நீர் | + | ஏரி | = | நீரேரி |
| வான் | + | ஒலி | = | வானொலி |

ஒரு வினைச் சொல்லுடன் ஒரு பெயர்ச்சொல் சேர்ந்து கூட்டுப் பெயர் அமையும்

| | | | | |
|---|---|---|---|---|
| வினை | + | பெயர் | = | கூட்டுப்பெயர் |
| இடி | + | தாங்கி | = | இடிதாங்கி |
| தொலை | + | காட்சி | = | தொலைக்காட்சி |
| கட்டு | + | உரை | = | கட்டுரை |

கீழேயுள்ள சொற்களை அவதானிப்போம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புகைவண்டி | - | புகை | + | வண்டி | | |
| கடலலை | - | கடல் | + | அலை | | |
| வெளியீட்டுத்திணைக்களம் | - | வெளியீடு | + | திணை | + | களம் |
| புகைவண்டி நிலையம் | - | புகை | + | வண்டி | + | நிலையம் |

இவை தனிச் சொற்களால் ஆன கூட்டுப்பெயர்களாக அமைவதை அறிந்து கொள்ள முடியும்.

எனவே,

> ‘‘தனிச்சொற்களால் அமைந்து ஒரு சொல்லாகவே செயற்படும் சொற்களே கூட்டுப்பெயர் எனப்படும்’’

இவை தனிப் பெயர்களாகும். இவை தனித்தனியே பெயர்ச் சொல்லுக்குரிய இலக்கணப்பண்புகளை கொண்டிருக்கும்.

1. வேற்றுமை ஏற்கும்

   கடலலையை, கடலலையால், கடலலைக்கு, கடலலையில்

2. பெயரடைகளை ஏற்கும்

   அழகான புகைவண்டி, பெரிய புகைவண்டி

   சிறிய புகைவண்டி, புதிய புகைவண்டி

3. சுட்டு அடைகளை ஏற்கும்.

   அந்தவானொலி, இந்தவானொலி, உந்தவானொலி


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

வான், ஒலி ஆகிய இரண்டும் இணைந்து 'வானொலி' என்ற புதிய சொல்லாக உருவாகிய பின்னர், அவை தனித்தனியே இயங்காது. சேர்ந்தே இயங்கும்.

1. வேற்றுமையை இரண்டாவது சொல்லின் இறுதியிலேயே ஏற்கும்.

   படைப்பாக்கத்தை, படைப்பாக்கத்தால், படைப்பாக்கத்திற்கு

2. பெயரடைகள் முதலாவது சொல்லின் முதலில் மட்டுமே வரும்.

   அழகான படைப்பாக்கம், நல்ல படைப்பாக்கம், புதிய படைப்பாக்கம்

3. சுட்டு அடைகளும் முதலாவது சொல்லின் முதலில் மட்டுமே வரும்.

   அந்தப்படைப்பாக்கம், இந்தப்படைப்பாக்கம், உந்தப்படைப்பாக்கம்

எனவே

> ''கூட்டுப்பெயர்களில் இரண்டு சொற்களுக்கு இடையில் வேறு சொல்லோ உருபோ விகுதியோ வரமாட்டா.''

படைப்பை ஆக்கம்,

படைப்பு அழகான ஆக்கம்

படைப்பு இந்த ஆக்கம்

எனப்பயன்படுத்துவது பொருளற்றதாகும் என்பதனை உணர்ந்து கொள்கிறோமல்லவா?

கீழ்வரும் உதாரணங்களை அவதானிப்போம். நாமும் இவைபோல் கூட்டுப்பெயர்களை ஆக்குவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பெயர் | + | பெயர் | = | கூட்டுப்பெயர் |
| குதிரை | + | படை | = | குதிரைப்படை |
| தொழில் | + | சாலை | = | தொழிற்சாலை |
| கண் | + | காட்சி | = | கண்காட்சி |
| படைப்பு | + | ஆக்கம் | = | படைப்பாக்கம் |
| மணி | + | கட்டு | = | மணிக்கட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. வினை | + | பெயர் | = | கூட்டுப்பெயர் |
| எரி | + | கல் | = | எரிகல் |
| கூட்டு | + | உறவு | = | கூட்டுறவு |
| எழுது | + | கோல் | = | எழுதுகோல் |
| பாடு | + | பொருள் | = | பாடுபொருள் |
| பறி | + | முதல் | = | பறிமுதல் |

### பயிற்சி

1. 'நிலவிலே பேசுவோம்' என்ற சிறுகதையிலிருந்து, பெயரும் பெயரும் சேர்ந்து உருவாக்கக்கூடிய கூட்டுப்பெயர்கள் பத்தும், வினை + பெயர் சேர்ந்து உருவாக்கக் கூடிய கூட்டுப்பெயர்கள் பத்தும் எழுதுங்கள்.

### செயற்பாடு

ஒருவர், ஒரு பெயர்ச்சொல்லைக்கூற அடுத்தவர் இன்னுமொரு பெயர்ச்சொல்லைக் கூறி கூட்டுப்பெயர் ஆக்குக. இவ்வாறே இன்னுமொருவர் வினையடியைக் கூறி, மற்றுமொருவர் பெயர்ச்சொல்லைக் கூறி கூட்டுப்பெயர் ஆக்குக. வகுப்பறையிலுள்ள அனைவரும் மாறி மாறி இச்செயற்பாட்டைச் செய்து கூட்டுப்பெயர் ஆக்குங்கள்.